# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வணிகமாணிக் கற்கைநெறிக்கான அனுமதி – 2018 / 2019

மேற்படி வணிகமாணிக் கற்கைநெறிக்கு கல்வியாண்டு 2018/2019 மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம், தாங்கள் இக்கற்கைநெறிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள, கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கான விண்ணப்பப்படிவத்தையும், மக்கள் வங்கியில் பணம் கட்டுவதற்கான உறுதிச்சீட்டையும், பூர்த்தி செய்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதிவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

- பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவம்
- மக்கள் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான உறுதிச்சீட்டு (மூலப்பிரதி)
- கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- திருமணச்சான்றிதழ் (பெண்கள்) (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- தேசிய அடையாளஅட்டை (புகைப்படப்பிரதி)
- தற்போது வகிக்கும் பதவியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
- கணினி அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்
- ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
- சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு புகைப்படங்கள்(**3.0cmx3.5 cm, White Background)**

**கற்கைநெறிக் கட்டணம் தொடர்பானவிபரம்**

| வருடம் | கட்டணம் செலுத்தப்பட வேண்டிய காலம் | தவணைக் கட்டணம் |
|---|---|---|
| 1ம் வருடம் | பதிவின் போது | ரூபா . **37,500.00** |
| 1ம் வருடம் – 1ம் அரையாண்டு (பரீட்சைக்கு முன்பு) | முதலாம் வருட முதலாம் அரையாண்டுக்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா . **15,000.00** |
| 2ம் வருடம் | இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுக்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா . **39,000.00** |
| 3ம் வருடம் | மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுக்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா . **39,000.00** |
| 4ம் வருடம் | நான்காம் வருட முதலாம் அரையாண்டுக்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா . **39,000.00** |
| **மொத்தக் கட்டணம்** | | ரூபா . **169,500.00** |

- மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் ஒவ்வொரு கட்டணங்களும் முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.

பதிவினை மேற்கொள்வதற்காக, மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு **தங்களுக்கு என ஒதுக்கப்பட்ட தினத்தில்** நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுதல், அல்லது போலியான ஆவணங்களை சமர்ப்பித்தல், ஏற்கனவே உயர்கல்வி நிறுவனமொன்றில் உள்வாரியாகவோ/வெளிவாரியாகவோ ஏதாவது ஒரு கற்கைநெறியின் பொருட்டு பதிவுகளை மேற்கொண்டிருத்தல் மற்றும் குறித்த திகதியில் நேரில் சமுகமளிக்காதோரின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன், எக்காரணம் கொண்டும் கொடுப்பனவுகள் எவையும் மீளளிக்கப்படமாட்டாது, என்பதனையும் தாங்கள் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு** :குறித்த திகதியில், மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் பதிவினை மேற்கொள்ளாதோரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், எவ்வித அறிவித்தலுமின்றி காத்திருப்போர் பட்டியலில் இருந்து அவ்வெற்றிடம் உடனடியாக நிரப்பப்படும் என்பதனைக் கவனத்திற்கொள்ளவும்.

J. Arulyaman

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.**